# நீடித்த நிலைத்த ஆளுகைக்கு நிலைகொடை

சி. கண்ணன்

## பின்னணி

நம் பாரத தேசத்தில் பழம்பெருமை பேசும் பண்பாட்டு கட்டமைப்புகள் இரண்டு. ஒன்று கோவில்கள் மற்றொன்று நீர்நிலைகள். தொல்லியல் ஆய்வாளர்கள் ஒவ்வொரு கோவிலுக்கும் அதன் தொன்மையை கல்வெட்டுகளிலிருந்தும், இலக்கியங்களிலிருந்தும் விவரிக்கின்றனர். இந்தக் கோவில்கள் இத்தனை கால மாற்றத்திலும், கம்பீரமாக காட்சியளிப்பதற்கு நமது பண்பாடும், கோவில்களை பராமரிக்க நம்முன்னோர்கள் ஏற்பாடு செய்திருந்த நிர்வாகமும்தான்.

கால நீரோட்டத்தில் கடவுளை ஒரு வேளை கண்டுகொள்ளாமல் போனலும், ஆறு கால பூஜை சிறப்பாக நடைபெற கோவில்களுக்கு நிலங்களும் பிற வருவாய் தரக்கூடிய சொத்துக்களையும் உருவாக்கியது நமது முன்னோர்களின் தனிச் சிறப்பு. மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்கும் சொத்துக்கள் இருக்கிறது. மரிக்குண்டு சீலைக்காரியம்மனுக்கும் சொத்துக்கள் இருக்கிறது. சிறிது பெரிது என்று பாராமல் எல்லா நிலையிலும், நிலைத்து இருக்க சொத்துக்கள் தந்த ஆர்வலர்கள் பாராட்டப்படவேண்டியவர்கள். நிலைத்து நின்று வருவாய் தருகின்ற சொத்துக்களை நிலைகொடை என்கிறோம்.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய் நிலத்தை நம்பியிருக்கும் வேளாண் குடிகளுக்கு நீர் தரும் நீர் நிலைகள் நம் பண்பாட்டோடு கலந்து பயன்தருகின்றவை. இத்தகு நீர்நிலைகளுக்கும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நிலைகொடை தந்த வரலாறு நம்மிடையே உள்ளது.

## வரலாற்றில் கல்வெட்டுச் சான்றோடு நிலைகொடை

கண்மாய் தொடர் பராமரிப்பிற்கு, நிலைகொடை, ஒரு தனி நபரால் வழங்கப்பட்டதற்கு சோமங்களத்தில் உள்ள ஒரு கல்வெட்டு (தென்னிந்தியக் கல்வெட்டு சாசனங்கள் தொகுதி 7 ஏண் 393) சான்று பகிர்கிறது.

காஞ்சிபுரம் மாவட்டம் திரும்பெரும்புதூர் வட்டத்தில் உள்ளது சோமங்களம் என்ற ஊர். இந்த ஊரில் மூன்றாம் குலோத்துங்கச் சோழனின் ஆட்சியில் (கி.பி.1190) பெருமழை பெய்தது. அம்மழையினால் வெள்ளம் பெருக்கெடுத்து சோமங்களத்திலுள்ள ஏரி ஒரே நாளில் ஏழிடத்தில் பெருமடையாக

உடைப்பெடுத்தது. அதனால் ஏரியில் தண்ணீர் தேங்காமல் வெளியேறிவிட்டது. அந்த ஏரியின் பாய்ச்சல் நிலங்கள் சாகுபடியாகாமல் கரம்பாக கிடந்தன. குடிமக்கள் இதனால் மிகவும் துன்புற்றனர்.

இவ்வாறு விவசாயிகளான குடிமக்கள் படும் துயரத்தை கண்ட திருச்சுர கண்ணப்பன் திருவேகம்பமுடையான காமன் கண்டவானவன் என்பவன் மேற்படி ஏரியின் உடைந்த மடைகள் ஏழையும் அடைபித்து உதவினான்.

ஆனால் அதற்கு அடுத்த ஆண்டில் ஏரி நிறைந்து மீண்டும் இரண்டு இடத்தில் உடைப்பெடுத்தது. அந்த அடைப்புகளையும் மீண்டும் அவனே அடைபித்தான். அத்துடன் அந்த ஏரி நிலை நின்றது. இது போன்று மீண்டும் உடைப்பெடுக்காமல் ஆண்டு தோறும் அந்த ஏரியை மராமத்து செய்துவர, 40 பழங்காசுகளை (பொற்காசு) அவ்வூர் மகாசபையிடம் முதலாக கொடுத்து, அதற்கு வரும் வட்டியை கொண்டு ஆண்டு தோறும் குழிகோலால் 40 குழி மண்ணெடுத்துக் கரையில் கொட்டி மராமத்து செய்து கொள்ள ஏற்பாடு செய்தான். இந்தச் செய்தியை அறிகின்ற போது அறம் செய்வதை அரசன் மட்டுமல்ல சாதரண குடிகளும் செய்துள்ளனர் என்பதை நாம் அறிய முடிகிறது.

அந்நியர் ஆட்சியில்

மண்ணால் அமையப்பெற்ற நம் முன்னோர்களின் அறிவுப் பெட்டகமான நீர் நிலைகள் கால கட்டாற்று வெள்ளத்தில் நிலைத்து நின்றது. அதற்கு நம் முன்னோர்களின் கூட்டு முயற்சியும் அறப்பண்பும் சரியாக அமைந்தமையே சரி எனலாம். ஆங்கிலேயே ஆட்சி நம் மண்ணில் எதைச் செய்தாலும் அதை அவர்கள் செய்வது போன்ற தோற்றத்தையே போலச் செய்த்து. குடிகள் எல்லாம் கொண்டாடிச் செய்த குடிமராமத்து, அவர்கள் காலத்தில் சட்டமாக்கப்பட்டது. சட்டமாக்கப்பட்டதால் என்னவோ அது குடிகளால் கைவிடப்பட்டது. குடிமராமத்தை கைவிட்டதன் விளைவு நீர்நிலைகள் மேடுதட்டத் தொடங்கின.

புதிய அரசாங்கம், பழைய முறைகள்

நம் சுதந்திர இந்தியாவில், பொதுப்பணித்துறை பெரிய நீர்நிலைகளை நிர்வாகம் செய்யவும், சிறிய நீர்நிலைகளை ஒன்றியம் நிர்வாகம் செய்யவும், குடிமக்கள் வேடிக்கை பார்ப்பவர்கள் ஆனார்கள். சுதந்திரம் பெற்ற வேகத்தில் அணைகள் கட்ட அரசு ஆயத்தமானது. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய் அன்னம் வழங்கிய நீர்நிலைகளுக்கு நிதிப்பற்றாக்குறை வந்தது. ஓரு முறை மாரமத்து பார்த்து அடுத்த மராமத்திற்குள் ஏரி கண்மாய் தன் சுவடை இழந்தது.

ஏரி குளங்கள் தன்னிலையை அடைய தானகவே முயற்சிக்க முடியாத்தால் ஆங்காங்கே நல்ல தலைவர்களால், முயற்சிகள் முளைக்கவும் செய்தன.

## நீர்நிலைகளுக்கு இணைத் தொகை வழங்கும் திட்டம்

தமிழகத்தில் அண்ணா பல்கலைக்ழகம் பல்வேறு துறைசார்ந்தோரின் கூட்டு முயற்சியில், ஐரோப்பிய நிதித் திட்டத்தில் ஏரிகளை புணரமைக்கும் திட்டத்தை சோதனை முயற்சியில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் செயல்படுத்தியது. பல்வேறு துறை சார்ந்தோர்களில் ஆலோசனைகள் ஆராயப்பட்டு, அவர்கள் மக்கள் அமைப்புகளைக் கொண்டு சீரமைப்பு பணிகள் செய்த நீர்நிலைகளுக்கு, திட்டத்திலேயே தொகை வழங்க ஏற்பாடு செய்தனர். அவ்வாறு வழங்கும் தொகைக்கு இணையான தொகையை நீர்நிலை சார்ந்த மக்கள் அமைப்பே தர வேண்டும் என பணிக்கப்பட்டு இணைத் தொகை வழங்கப்பட்டது. சுதந்திர இந்தியாவில் திட்டமிட்ட வழங்கப்பட்ட இணைத்தொகை இதுவாகத்தான் இருக்கும் என எண்ணுகிறோம்.

## தானம் அறக்கட்டளை நீர்நிலைகளுக்கு நிலை கொடை வழங்கும் திட்டம்

தானம் அறக்கட்டளை 1992ஆம் ஆண்டிலிருந்து, ஏரி கண்மாய் குளம் போன்ற நீர்நிலைகளுக்கு மக்கள் அமைப்புகளை உருவாக்கி, அந்த மக்கள் அமைப்புகளின் வழியாக நீர்நிலைகள் சீரமைப்பு, நிர்வாகம், வேளாண் பயிற்சிகள், குறுநிதி சேவை செய்தல் போன்ற பணிகளின் வாயிலாக வறுமை குறைப்பை செயல்படுத்தி வருகிறது. ஏரி கண்மாய் போன்ற நீர்நிலைகளுக்கு உருவாக்கப்படும் மக்கள் அமைப்புகள் (வயலகம்) தனது ஆளுகை(ஆட்சி)யை சிறப்பாக செயல்படுத்திடவும், நீர்நிலைகளை தொடர்ந்து பராமரித்திடவும் 1999ஆம் ஆண்டிலிருந்து நிலைகொடை வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திலும் இணைத்தொகை அடிப்படை பின்பற்றப்பட்டது.

நிலைகொடையின் மதிப்பு குறைந்திடாமல் என்றும் நிரந்தரமாக இருக்க, வட்டி வருவாயிலிருந்து பத்து விழுக்காடு தொகையை திரும்ப நிலைகொடைக்கே திரும்ப செலுத்துவது என்ற கொள்கையை கடைப்பிடித்து வருகிறது.

நிலைகொடைக்கு இணைத்தொகை வழங்க ஆரம்பத்தில் சர்ரத்தன் டாடா அறக்கட்டளை மற்றும் நோவிப் நெதர்லாந்து நிறுவனம் போன்றவை முன்வந்து வழங்கின. தொடர்ச்சியாக ஐடிசி , ஆக்ஸிஸ் வங்கி மற்றும் கெச்யுஎல் போன்ற வணிக நிறுவனங்களும் இணைத்தொகை வழங்கி வருகின்றன. இதில் மக்கள் அமைப்புகளும் சம இணைத்தொகையினை

நீர்நிலைகளின் தொடர் பராமரிப்பிற்கு வழங்கிவருவதையும் குறிப்பிட வேண்டும்.

வயலகங்களில் நிலைகொடையும் நல் ஆளுகையும்

குமாரசமுத்திரம் கண்மாய் வயலகம் - கொட்டாம்பட்டி வட்டார வயலகம்

1999ஆம் ஆண்டு மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் கொட்டாம்பட்டி ஒன்றியத்திற்குட்பட் வெள்ளினிப்பட்டி கிராமத்திலுள்ள குமாரசமுத்திரம் கண்மாய் வயலகத்திற்கு ரூபாய் 10000 சர் ரத்தன் டாடா அறக்கட்டளை இணைத்தொகையாக வழங்கியது. அந்த வயலத்தில் பங்கான ரூபாய் 10000த்தையும் சேர்த்து ரூபாய் 20000த்தை தும்பைப்பட்டி கனரா வங்கியில் வைப்புநிதியில் வைத்தனர். இதன் வட்டி வருவாயைக் கொண்டு சீரமைப்பு பணி மேற்கொள்வதென தீர்மானித்தனர்.

நிலைகொடையாக நிதி சேர்ந்த நேரம், வயலகத்திற்கு பல்வேறு வகையில் நிதி வரத்தொடங்கியது. சமுதாய கிணறு பயன்படுத்துதல், கண்மாயில் மரம் வளர்ப்பு, போன்ற பணிகளும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. வயலகம் ஆரம்பித்த்தில் தொடங்கி வெளிநிறுவனங்களில் நிதி பெற்று மக்கள் பங்கேற்போடு மூன்று முறை சீரமைப்பு பணி சிறப்பாக நடைபெற்றது. ஆண்டுதோறும் சிறிய சீரமைப்பு பணிகளை அவ்வயலகமே சிரத்தையோடு செயல்படுத்திவருவது நிலைகொடையின் சித்தாந்தம் செயல்படுவதாகவே உணர்வோம். தற்போது குமாரசமுத்திரம் கண்மாய் வயலகத்தின் வங்கிக் கணக்கில் ரூபாய் 3.0 இலட்சம் வரை வைத்துள்ளனர். இதே போன்று இவ்வூரில் உள்ள ஆதியாகுளம் வயலகமும் 1999ஆம் ஆண்டு நிலை கொடை பெற்றனர். இவ்வயலகமும் மிகச்சிறப்பாக செயல்பட்டுவருகிறது. இவ்வயலகத்தின் வங்கிக் கணக்கிலும் தற்போது ரூபாய் 2.0 இலட்சம் வரை நிதி உள்ளது.

அல்லி கண்மாய் வயலகம் - சிங்கம்புணரி வட்டார வயலகம்

அல்லி கண்மாய் வயலகம் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஒன்றியத்திற்குட்பட் கிருங்காக்கோட்டையில் அமைந்துள்ளது. தொடர்ச்சியான மாதந்திரக் கூட்டம், வேளாண் முயற்சிகள், தொடர் பராமரிப்பு என முன்னோடியாக செயல்பட்டு வருகிறது. வரத்துக்கால்வாய் சீரமைப்பை பராமரிப்பை முறையாக செய்துவருவது இவ்வமைப்பின் சிறப்பு. இவ்வயலகம் 2003ஆம் ஆண்டு சர் ரத்தன் டாடா அறக்கட்டளை மூலம் இணைத் தொகை பெற்றது. பின்பு ஐடிசி நிறுவனத்திலும் இணைத்தொகை பெற்று நிலைகொடைக்காக வைப்புநிதியில் வைத்து பேணி வருகிறது.

சுமார் நான்கு கோடி ரூபாய் அளவிற்கான நிதி நீர்நிலைகளின் தொடர் பராமரிப்பிற்காக வயலகங்களில் உள்ளது. இது 1999ஆம் ஆண்டு தானம் அறக்கட்டளை எடுத்த முயற்சிக்கு கிடைத்த பலன். இதில் தொடர் பராமரிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது பெருமைக்குரிய விசயமாகும்.

நிலைகொடையின் விளைவுகள்

- மக்கள் அமைப்புகள் ஸ்திரத் தன்மையோடு செயலாற்றுகின்றன.
- வயலக அமைப்புகளில் ஆளுகை (ஆட்சி) முறை மேம்பட்டுள்ளது.
- தொடர் பராமரிப்பிற்கு நிதி உறுதியாக உள்ளது.
- பேரிடர் காலங்களில் பிறரை எதிர்பார்த்து நிற்க வேண்டிய நிலை இல்லை.
- அமைப்பின் வலிமை கிராம மேம்பாட்டுப் பணிகளையும் எடுத்துச் செய்ய வழிவகுத்துள்ளது.

நிலைகொடை விரிவு பெற

கொடைத் தன்மை எல்லோருக்குள்ளும் வேண்டுமென்பதற்காக, அவ்வைப்பாட்டி அறம் செய விரும்பு என்றாள். அறம் செய் என்ற ஆணை பிற்பிக்க வில்லை. கொடைத்தன்மை எல்லோராலும் முடியும். அவ்வையார், இதனை குழந்தைகளிடமே ஆரம்பித்து வைக்கிறார். நீர்நிலைகள் நம்முடைய சொத்து. அந்த சொத்து சோடைபோகமல் இருக்க அதற்கும் சொத்து வேண்டும். அதற்கு உருவாக்க நிதி நிறுவனங்களோடு மட்டும் நின்று விடாமல் கொடையாளர்களிடம் பெற வேண்டும்.

வயலக உறுப்பினர்கள் இணைத்தொகை வழங்கும் போது தங்களுடைய பங்கை செலுத்துகின்றனர். தொடர்ச்சியாக தங்களுடைய பங்களிப்பை தர முன்வரலாம்.

சில யோசனைகள் முன்னே…

- நமது வாழ்க்கை சுழற்சியில் உள்ள மகிழ்வான தருணங்களில் எல்லாம் நிலை கொடைக்கு தொகை வழங்கலாம். குழந்தை பிறப்பின் போது, பிறந்த நாள் கொண்டாட்டங்களின் போது, திருமணம் போன்ற சுப நிகழ்வுகளின் போது…
- நமது வெற்றிக் கொண்டாட்டத்தின் போது, நினைவு நிகழ்வுகளின் போது….